முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22 திகதி முதல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29 திகதி வரை

(09.10.2022 ஞாயிறு முதல் 16.10.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கந்தவேலன் சக்தி கொண்டு
   கலியுகத்தை காக்க வேண்டி
   அந்தமிலா ஞானியாக வந்த
   ஆறுமுக அரங்கனே உமைபோற்றி
2. போற்றியே இந்தியா தமிழகத்தில்
   புகலுவேன் வருங்கால பலன்குறித்து
   உற்றதொரு சுபகிருது தரிவை திங்கள்
   உயர்வான இருபானீர்திகதி மேல்இருபான் நவதிகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வழங்குவேன் அகத்திய மகரிஷியும்
   வார ஆசிதனை எடுத்துரைப்பேன்
   வல்லமையான நிலைகளை அடைய
4. அடையவே இந்தியா தமிழக
   ஆளுமைகள் ஞானவழிக்கு வந்து
   தடைகளின்றி அரங்கமகானின்
   தவநெறி முறைகளை ஏற்று
5. ஏற்றுமே மக்களை வழிநடத்தல்
   எப்போதும் தயவாக இருக்கவேணும்
   உற்றதொரு மக்களை வருத்துகின்ற
   உயர்விலா வரிச்சுமைகள் தன்னை
6. தன்னையே முழுமைபட அகற்றி
   தரணியோர் வியக்கும் வண்ணம்
   அண்ணலின் தருமவழிகளை ஏற்று
   ஆளுமைகள் ஆட்சி புரிய
7. புரியவே மக்களிடை வளர்ச்சி
   புண்ணிய வழிகளாகமாறி இனிதே
   தெரியவரும் அமைதி பாதுகாப்பு
   தேசமெங்கிலும் நன்னெறி குறையா
8. குறையா மேன்மைகள் கூடி
   கூறிடுவேன் சமூக வளர்ச்சியும்
   குறையிலா தேட்டு தனவளமும்
   குருமார்கள் ஆசிஅருள் நிரம்பி

9. நிரம்பியே ஞானஆட்சி காலமாக
நிம்மதி தரும் வண்ணம் மாற்றம்
அருந்தவசி ஆசிபட ஆளுமைகள்
ஆற்றல் கூடி அற்புதம் நிகழும்

10. நிகழவே இயற்கைப் பாதுகாப்பும்
நீர்நில வளமுடன் பேரழிவின்றி
மகிழவே மக்களுக்கு சகலபாதுகாப்பும்
மகான்கள் ஆட்சிக்காலமாகவே தேறும்

வார ஆசி முற்றே —சுபம்—

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22ம் நாள் 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 29ம் நாள் 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

முருகப்பெருமானின் சக்தியை அளவிலாது பெற்று துன்பம் மிக்க கலியுகத்தினை காத்து மக்களை நிலை உயர்த்த வேண்டியே மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்ற முடிவில்லாத மகா ஞானியாக உலகின் சற்குருவாக முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்த ஆறுமுக அரங்க மகா தேசிகரே உம்மை போற்றியே அகத்திய மகரிஷி யானுமே சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22ம் நாள் 09.10.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 29ம் நாள் 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் இந்தியா தமிழகத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்திய தேசம் வல்லமையான நிலைகளை பெறவேண்டுமாயின் நாட்டை ஆள்பவர்கள் ஞானிகள் வகுத்த ஞானநெறிகளை ஆறுமுக அரங்கமகான் கூறும் தானதரும தவ நெறிமுறைகளை தயவு நெறிகளை ஏற்று அதன்வழி நடந்திட வேண்டும். நாட்டு மக்களின் மீது தயவுடன் நடப்பதுடன் மக்களை வருத்துகின்ற அதிகமான வரிச்சுமைகளை அகற்றி உலகமே வியக்குமாறு அரங்கரின் தரும நெறிகளை ஏற்று தருமங்களை தாராளமாகச் செய்து மக்களை வழி நடத்திட நாட்டு மக்கள் சகலவிதமான வளர்ச்சிகளையும் பெறுவார்கள்.

நாட்டு மக்கள் எல்லாம் தர்மவழிகளை பின்பற்றி நடந்து தர்மங்களை செய்து வருவதனாலே மக்களின் செயல்கள் புண்ணிய செயல்களாக மாறி நாட்டின் புண்ணிய பலம் பெருகி நாட்டினில் அமைதி உண்டாகும். ஞானிகளின் அருள் பாதுகாப்பையும் பெறுவதோடு இயற்கை பாதுகாப்பையும் நாடும் நாட்டு மக்களும் பெற்று மக்களின் வாழ்வாதாரம் பெருகிடும். மக்கள் நன்னெறி வழி நடப்பார்கள். மக்களிடத்து மேன்மையான பண்புகள் அதிகமாகி மேன்மையுள்ள மக்களாகி ஆகியே சமூகம் நன்னெறி சமூகமாக வளர்ச்சி அடையும்.

மக்களிடம் உள்ள வறுமை நீங்கிடும். நல்ல வருவாய் பெருக்கமும், நாட்டினில் பொருளாதார மேம்பாடும் உண்டாகும். ஞானிகளின் அருளாசிகளை மக்கள் பெறுவதோடு ஞானவழி பின்பற்றும் சற்குருமார்களின் அருளாசிகளையும் மக்கள் பெற்று ஞான வழி நடப்பர். நாட்டின் ஆட்சியே ஞானஆட்சி காலமாக மாறிடும். மக்கள் நிம்மதியான வாழ்வினை வாழ்வார்கள்.

ஞானிகளின் வழிபாடும் பெருகி ஞான குருநாதர், அருந்தவசி ஆறுமுக அரங்க மகானின் அருளாசிகளால் ஆட்சி புரிவோரின் ஆற்றல் பெருகி நாடெங்கும் அற்புதங்கள் நிறைவேறும். இயற்கை பேரிடர்கள் இல்லாது நாடு இயற்கை பாதுகாப்பை பெற்று நாடெங்கும் நீர் வளமும் நிலவளமும் பெருகி பேரழிவுகள் இல்லாத சகல பாதுகாப்பும் பெற்ற நாடாக இத்தேசம் மாற்றம் பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி. —சுபம்—